

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (09.10.2024) வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் மாநகராட்சி, நகராட்சி மற்றும் தேசிய நெடுஞ்சாலை அருகாமையில் உழவர் அங்காடிகள் அமைப்பது தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, வேளாண் விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறை ஆணையர், முதன்மைச் செயலாளர் ஜி.பிரகாஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டத்தில் சாலை விபத்து:

# உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா ரூ. 2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக். 11 –

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம், மைவாடி கிராமம், கருப்பசாமி புதூர் புதிய புறவழிச்சாலை யில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டை கோட்டம், மடத்துக்குளம் வட்டம், மைவாடி கிராமம், கருப்பசாமிபுதூர் புதிய புறவழிச்சாலை யில் 08.10.2024 அன்று இரவு சுமார் 11.30 மணியளவில் பழனியிலிருந்து கேரளாவை நோக்கி சென்ற சுற்றுலா வாகனமும், உடுமலைப் பேட்டையிலிருந்து பழனி நோக்கிச் சென்ற நான்குசக்கர வாகனமும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இந்திரா நகரில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த திருமதி. மனோன்மணி (வயது 65), தியாக ராஜன் (வயது 45), திருமதி.பிரீத்தி (வயது 40) மற்றும் சிறுவன் ஜெயப் பிரியன் (வயது 12) ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் நாட்ராயன் (வயது 80) அவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### திருச்சி வடக்கு மாவட்ட

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தலைமை திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன்! முன்னிலை தர்மன் ராஜேந்திரன் – மெடிக்கல் முரளி!

திருச்சி, அக். 11 -

திருச்சி மாவட்டம், துறையூரில் 02.10.2024 மாலை 5:30 மணி அளவில் ஏ வி எஸ் மண்டபத்தில் திருச்சி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு மத்திய மண்டல பொறுப்பாளர் மாநில துணைச் செயலாளர் எழில்மாறன் செல்வேந்திரன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்கு திருச்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

மேலும் நகர்மன்ற செயலாளர் மெடிக்கல் முரளி, மத்திய ஒன்றிய செயலாளர் இளா. அண்ணாதுரை, மேற்கு ஒன்றிய செயலாளர் வீரபத்திரன், கிழக்கு ஒன்றிய செயலாளர் சரவணன், துறையூர் ஒன்றிய குழு தலைவர் திருமதி. சரண்யா மோகன் தாஸ், பொதுக்குழு உறுப்பினர் கிட்டப்பா, வடக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் செல்லமுத்து, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. கிருபா, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் திருமூர்த்தி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அம்மன் பாபு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சுரேஷ் குமார், மாவட்ட ஆதிதிராவிடர் அணி தலைவர் மணிவண்ணன், மாணவரணி துணைத் தலைவர் பிரபாகரன், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கலை செல்வன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கௌதம், கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் வடக்கு மாவட்ட தலைவர் கஸ்டம்ஸ் மகாலிங்கம், மாவட்ட அமைப்பாளர் கா. லெனின், மாவட்டத் துணைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.தமிழரசன், செந்தில், இளங்கோவன், ராஜ்குமார் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சார்பாக அரசு பள்ளி மாணவ, மாணவியருக்கு கலைஞரின் கவிதைகள் வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நடத்துவது சம்பந்தமாகவும், திருச்சி வடக்கு மாவட்ட கழகத்தின் கலை, இலக்கி, பகுத்தறிவுப் பேரவை நகர பேரூர் கழக, ஒன்றிய கழக நிர்வாகிகளை நியமிப்பது சம்பந்தமாகவும், தமிழகத்தின் துணை முதல்வராக பொறுப்பேற்று இருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாகவும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய மண்டல பொறுப்பாளர் எழில்மாறன் செல்வேந்திரன் உரையாற்றினார்கள்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து நிர்வாகிகளையும் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாவட்ட அமைப்பாளர் லெனின் வரவேற்றார். தமிழரசன் நன்றியுரை ஆற்றினார்.

# தி.மு.க. அயலக அணிக் கூட்டம்!

## எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

கழக பவள விழா கொண்டாட்டம், தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, இளைஞரணிச் செயலாளர், இளந்தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா ஆகியவற்றை சிறப்பான முறையில் நடத்திட விழுப்புரத்தில் வரும் 18.10.2024 (வெள்ளிக்கிழமை) அன்று தி.மு.க. அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அனைத்து மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**எம்.எம்.அப்துல்லா எம்.பி.**
செயலாளர், கழக அயலக அணி



முரசொலி செல்வம் அவர்களின் மறைவையொட்டி திண்டுக்கல் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கழக நிர்வாகிகள் மவுன அஞ்சலி செலுத்தினர்.

# ஒரு கேள்வி; ஒரு பதில்!

**கேள்வி:** அரசு நிகழ்ச்சிகளுக்கு தி.மு.க. சின்னம் பொறித்த ‘டி.சர்ட்’ அணிந்து துணை முதலமைச்சர் கலந்து கொண்டு மரபு மீறி செயல்படுவதாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளாரே?

**பதில்:** **கருப்பு, வெள்ளை, சிகப்பு பார்டர் பொறித்த கட்சிச் சின்ன கரை வேட்டிகளை அணிந்து அவருடைய கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதல் எடப்பாடி பழனிச்சாமி வரை முதலமைச்சர்களாக பல அரசு விழாக்களில் கலந்து கொண்டதும் மரபு மீறலா? உ.பி.யில் காவி உடையிலேயே ஒரு முதல்வர் உலா வருகிறாரே; அது எத்தகையச் செயல்? விளக்குவாரா ஜெயக்குமார்?**

### உள்ளாட்சித் தேர்தல் குறித்து

# முதலமைச்சர் தான் முடிவு செய்ய வேண்டும்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

புதுக்கோட்டை, அக்.11 -

புதுக்கோட்டை மாநகராட்சியின் முதல் மேயராக திலகவதி செந்தில் பதவி ஏற்பு.

புதுக்கோட்டையில் 145 கோடி மதிப்பிலான திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர் கே.என்.நேரு.

நூற்றாண்டு கண்ட புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டது. அதன்படி புதுக்கோட்டை மாநகராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநகராட்சியின் முதல் மேயராகவும், பெண் மேயராகவும் திலகவதி செந்தில் பதவி ஏற்றுக்கொண்டார். துணை மேயராக லியாகத் அலி மற்றும் மாமன்ற உறுப்பினர்களும் பதவி ஏற்று கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர் பங்கேற்று மாநகராட்சி மேயருக்கு அங்கி, 5.1/4 அடி உயரம் கொண்ட செங்கோல், 51 பவுன் தங்கச் சங்கிலியை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து மாமன்ற கூட்ட இருக்கையில் மேயர் திலகவதி செந்திலை அமர வைத்து, கூட்டத்தை அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்.

முன்னதாக புதுக் கோட்டையில் 101.34 கோடியில் பாதாள சாக்கடை திட்டம், புதிய பேருந்து நிலையம் கட்ட 18.90 கோடியில் அடிக்கல் நாட்டு விழா, ஐந்து வார்டுகளுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் பணிக்கு 25. 31 கோடியில் அடிக்கல் நாட்டினார்.



இதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் பதவியேற்பு விழாவில் 145 கோடி மதிப்பிலான திட்ட பணிகளை தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் கே.என்.நேரு,

வடகிழக்கு பருவ மழையை ஒட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துறை சார்ந்த அதிகாரியுடன் ஆலோசனை நடத்தி, என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கியுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் எந்தெந்த பணிகள் தாமதமாக உள்ளது, தாமதத்திற்கு என்ன காரணம், என்பது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

தமிழக முழுவதும் உள்ள நகர் பகுதிகளில் வாய்க்கால்கள் தூர்வாரப் பட்டு ஆகாயத்தாமரை அகற்றப் பட்டுள்ளது. எந்த நிலையிலும் பருவ மழையை எதிர்கொள்ள வேண்டிய தயார் நிலையில் நகராட்சி நிர்வாகம் உள்ளது.

மழை பாதிப்புகள் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கும், சேதமடைந்த மரங்களை அகற்றுவதற்கும், உணவு தயாரிப்பதற்கும் ஒரே இடங்களில் இல்லாமல் பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், பால் போன்ற அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சித் தேர்தல் குறித்து முதலமைச்சர் தான் முடிவு செய்ய வேண்டும். அதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

கடந்தாண்டு வடகிழக்கு பருவமழைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சரியாக பயன்படுத்தவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டிற்கு பதில் அளித்த அவர், எதிர்க்கட்சிகள் என்றுமே நன்றாக பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூற மாட்டார்கள். திட்டமிட்டபடி அனைத்து பணிகளும் முறையாக நடந்து கொண்டிருக்கிறது. வடகிழக்கு பருவமழை பெய்யும் போது மழைநீர் தேங்காமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இயற்கையின் சீற்றம் அதிகமாக இருக்கும் போது, அதற்குத் தேவையான உபகரணங்களும் தயாராக உள்ளது.

திருநெல்வேலிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டது குறித்த கேள்விக்கு, கட்சி எந்த பணி கொடுக்கிறதோ அந்த வேலையை செய்யப் போகிறேன் என பதிலளித்தார்.

புதுக்கோட்டையை மாநகராட்சியாக தரம் உயர்த்துவதால், அதனால் உயர்த்தப்படும் வரி உயர்வு ஏழை மக்களை பாதிக்காது. 1200 சதுர அடிக்கு மேல் கட்டடம் கட்டுபவர்களுக்கு மட்டும் தான் 40% வரி உயரும் என்று கூறினார்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

# வில்லிவாக்கம் கிழக்கு பகுதி வாக்காளர்களுக்கு தயாநிதி மாறன் எம்.பி.நன்றி தெரிவிக்கிறார்!

## பகுதிச் செயலாளர் வே.வாசு அறிக்கை! அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, அக்.9–

வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வே.வாசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி 96,97,97(அ), 98, 98(அ), 98(ஆ) வட்ட வாக்காளர்களுக்கு 11.10.2024 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தயாநிதிமாறன் எம்.பி. நன்றி கூருகிறார் இந்நிகழ்ச்சியை மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர் பாபு தொடங்கி வைக்கிறார். அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ. முன்னிலைவகிக்கிறார்.

தயாநிதி மாறன் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் இடங்கள் வருமாறு:

குட்டியப்பன் தெரு, சன்னியாசிபுரம் பார்க், அயன்புரம் சாலை, வி.பி. காலனி விரிவு, உஜ்ஜினி தெரு, எஸ்.எஸ். தேவர் 6 வது தெரு, எஸ்.எஸ். தேவர் 5 வது தெரு, A.V. கோயில் மெயின் தெரு,அப்பாதுரை 2 வது தெரு,அப்பாதுரை மெயின் தெரு, பாளையக்கார தெரு, மேட்டு தெரு NM.K தெரு, P.A கோயில் தெரு,சபாபதி தெரு, சோலை மெயின் தெரு, வீராசாமி தெரு,முத்தம்மன் கோயில் தெரு, வெள்ளாள தெரு,பெரியார் சாலை பட்டச்சாரி தெரு, pE கோயில் மெயின் தெரு, P.E கோயில் மேற்கு மாட வீதி,K.H ரோடு தொடர்ந்து வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி96 வது வட்ட கழக அலுவலகம் அருகே நிறைவடைகிறது. எனவே இந்நிகழ்ச்சியில் கழக முன்னணியினர் தோழர்கள் தலறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு பகுதிச் செயலாளர் வே.வாசு அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கெ. பழனிசாமி

**அக்டோபர் 11 (2016)**



**தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**1960ஆம் ஆண்டு தர்காஸ் கண்டிகை என்ற தனது கிராமத்தில் கிளைக் கழகத்தை துவக்கி பதினேழு ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும் பின்னர், திருப்பெரும்புதூர் வட்டக் கழகப் பிரதிநிதியாகவும், தொடர்ந்து குன்றத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**1996ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**